[1972 ஏப்ரல் 3

திரு. கே. என். குமாரசாமி: கைத்தறி உடமையாளர் சங்கம் கலைக்கப்பட்ட காரணத்தால் தனித் தனியாகத் கைத்தறியில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் கோரிக்கை கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அலைந்திருக்கிறார்கள். மீண்டும் அவர்களிடத்தில் தனித் தனியாகப் பேசி முடிக்கப்பட்ட ஒப்பந்தப் பிரகாரம் அவர்களுக்கான கோரிக்கையைக் கொடுக்க அரசாங்கம் வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அதைப்பற்றி அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: கைத்தறி நெசவாளர் பிரச்சினையில் பரமக்குடி, மதுரை போன்ற இடங்களில் ஆண்டு தோறும் அரசு தலையிட்டு ஒப்பந்தம் ஏற்படுகிறது. அந்த ஒப்பந்தம் தாசில்தார் முன்னிலையிலோ ஆர்.டி.ஓ. முன்னிலையிலோ நடைபெறுகிறது. தொழிலாளர்களுக்கான ஒப்பந்தம் ஏற்படும் நேரத்தில் அதை 12 (3) சட்டத்தின்படி என்ஃபோர்ஸ் பண்ண முடியும் என்ற நிலை இருக்கும்போது இங்கு அம்மாதிரி நிலை இல்லை என்று ஏற்படுகின்றது. மாஸ்டர் வீவர்கள் பல முறையில் ஒப்பந்தத்தை மீறுகிறார்கள். அம்மாதிரி இவர்கள் ஒப்பந்தத்தை மீறாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: மாஸ்டர் வீவர்களை அணுகி அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று வலியுறுத்தப்படுகின்றனர். அதற்குள்ளாக தொழிலாளர் பிரதிநிதிகள் நாங்களே அணுகி முடிவுகாண்கிறோம். முடிவு காணவில்லை என்றால் உங்களை அணுகுகிறோம் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

பீடி, சுருட்டு தொழில்கள் சட்டம்.

* 851 வினா—**திரு. என். மருதாசலம்:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பீடி, சுருட்டு தொழிலாளர் சட்டம் தமிழ்நாட்டில் அமுலாவதை உயர்நீதி மன்றத்தின் மூலம் பீடி முதலாளிகள் 'ஸ்டே' உத்தரவுகள் பெற்று நான்கு ஆண்டுகளாகியும், அச்சட்டத்தை அமலாக்க நீதிமன்ற விசாரணையைத் துரிதப்படுத்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா?

1972 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளை விரைவில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள நீதிமன்றத்தை வழிவகை காணுமாறு அரசு வழக்குரைஞர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்காக வரைவு மனு ஒன்றைத் தயாரித்து அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. என். மருதாசலம் : பீடித் தொழிலாளர் சட்டம் மத்திய சர்க்காரால் நிறைவேற்றப்பட்டு மாகாண சர்க்காரால் அமல் நடத்தப்பட வேண்டியது. இப்போது பீடி முதலாளிகள் கோர்ட்டுக்குச் சென்று 'ஸ்டே' வாங்கியிருக்கிறார்கள். சர்க்கார் அரசியல் சட்டத்தில் 25-வது ஷரத்தைத் திருத்திய பிறகு அந்த 'ஸ்டே'யை ரத்து செய்து உடனடியாகப் பீடித் தொழிலாளர் சட்டத்தை அமலுக்குக் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இந்த வழக்கு ஏறத்தாழ நான்கு ஆண்டுக் காலமாகக் காலதாமதமாவதால் உடனடியாக இதை எடுத்துக் கொள்ளுமாறு அரசு வழக்குரைஞர் மூலம் நீதிமன்றத்திற்குத் தெரிவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. விரைவில் அதுபற்றித் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அண்டை மாநிலங்களிலும் பீடி சுருட்டுத் தொழிலாளர் சட்டம் வந்தால்தான் இதை நல்ல முறையில் அமல் நடத்த முடியும். இப்போது பீடித் தொழில் அதிபர்கள் தங்களுடைய தொழிலை ஆந்திராவுக்கோ, கேரளாவுக்கோ எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். ஆகவே நம்முடைய அரசு மத்திய சர்க்கார் ஒத்தாசையோடோ அல்லது அண்டை மாநிலங்களில் ஒத்தாசை பெற்றோ இந்தச் சட்டத்தை அங்கும் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அண்மையில் சென்னைக்கு வந்திருந்த மத்திய தொழிலாளர் நல அமைச்சர் கடில்கரிடத்தில் இதைப்பற்றித் தெரிவித்தோம். அவர்கள், விரைவில் நான்கு மாநிலங்களில் தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

[1972 ஏப்ரல் 3

திரு. கே. டி. கே. தங்கமணி: பீடி, சுருட்டுத் தொழிலாளர் பாதுகாப்புக்கான சட்டம் மத்திய அரசுச் சட்டம். அந்தச் சட்டம் செல்லாது என்று சொல்லி கோர்ட்டுகளிலே வாதாடுகிறார்கள். அப்படி வருகிறபோது குறிப்பிட்ட காலத்திலாவது அது முடிய வேண்டுமென்ற அளவுக்கு நமது ஹைகோர்ட்டுக்கு எந்த முறையில் சொல்ல முடியுமோ அந்த முறையில் அரசு சொல்ல முன்வருமா? ராஜமன்னார் குழு சிபாரிசில்கூட இம்மாதிரி ஹைகோர்ட், சுப்ரீம்கோர்ட்டில் இதெல்லாம் ஒரு கால அளவுக்குள் முடிய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் நம்முடைய அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: பீடித் தொழிலாளர் சட்டத்தையும், அதன்கீழ் இயற்றப்பட்டுள்ள விதிமுறைகளையும் கூடிய விரைவில் இம்மாநிலத்தில் செயல்படுத்த வேண்டுமென்ற வகையில் அரசு வழக்குரைஞர் நீதிமன்றத்தில் வழிவகை காணுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். இந்த ரிட் மனுக்கள் கோடை விடுமுறைக்குப் பின் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அரசு வழக்குரைஞர் தெரிவித்துள்ளார்.

திரு. கே. என். குமாரசாமி: இந்தச் சட்டம் அமலாக்கப்படாமலிருக்க முதலாளிகள் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? இதை அமலாக்காத பகுதிகளில் வேலை நிறுத்தங்கள், உண்ணாவிரதம், தொழிற் தகராறுகள் கிளப்பப்பட்டு வருகின்றன. பீடித் தொழிலாளர் சட்டம் இருந்தும்கூட பரிதாபகரமான முறையில் பீடித் தொழிலாளர் நிலை இருப்பதால் அரசு கடுமையான நடவடிக்கையை எடுப்பதன்மூலம் அந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவு மாநில அரசு எந்த அளவுக்குத் தலையிட முடியுமோ அந்த அளவுக்குத்தான் தலையிட முடியும். நீதிமன்றத்தை வலியுறுத்தப் போதிய அதிகாரம் இல்லை என்பதை அனைவரும் அறிவார்கள். இந்த அரசுக்குள்ள அக்கறையின் காரணமாக விரைவில் விசாரணைக்கு எடுக்க முறைப்படி வழிவகை காணப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.